**1) Name of Title holder : Mr. C.Subramaniam.** All that piece and parcel of land and Building in Salem Registration District, Suramangalam SRD, Salem Taluk, Jagirammapalayam Village, **Item No.1 :** Survey No. 246/1 - on east 60 ft, on west 60 ft, on north 30 ft, on south 30 ft, total extent 1800 sqft land and Building with all easement rights and pathway. **North by** Seerama Gounder Land, **South by** Govindan Land, **East by** Karuppannan Land, **West by** 4 feet lane and Seerama Gounder lands. **Item No 2 :** Survey No. 246/1 - on east 22 ft, on west 14 ft, on north 32 ft, on south 30 ft, total extent 558 sqft land with all easement rights and pathway. **North by** 23 feet Road, **South by** Shanmugam land, **East by** Kulandaiammal land, **West by** Elumalai land. **As per resurvey ward A, Block 53, TS No.86, Sastha Nagar.**

**DATE : 05-03-2024**
**PLACE : Salem**

**AUTHORISED OFFICER**
**CANARA BANK**

QuoteExpress — IF I HAVE SEEN FURTHER THAN OTHERS, IT IS BY STANDING UPON THE SHOULDERS OF GIANTS › ISAAC NEWTON

# சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப பயிலரங்கு

**ஓமலூர், மார்ச் 13:** சேலம் அரசு பொறியியல் கல்லூரி மின்னணு தொடர்பியல் துறை சார்பில் நவீன தொழில்நுட்ப பயிலரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

துறைத் தலைவர் ஏ.எம்.கல்பனா வரவேற்று ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரி முதல்வர் இரா.விஜயன் பயிலரங்கினைத் தொடங்கிவைத்துப் பேசினார். அப்போது அவர், பொறியியல் கல்வி பயிலும் மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட துறையில் மட்டும் தேங்கி விடாமல், அனைத்துத் துறை சார்ந்த அறிவினையும் பெற வேண்டும் என்பதற்காக அண்ணா பல்கலைக்கழகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதன்மூலம், இயந்திரவியல் பயிலும் மாணவரும் கணினி பொறியியல் குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கான பாடத்திட்டங்கள், செயல்முறை வகுப்புகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் மாணவர்களுக்கான வேலைவாய்ப்புத் திறன் அதிகரித்துள்ளதுடன், வேலை அளிப்பவராக மாறுவதற்கான நம்பிக்கையும் உருவாக்கப்படுகிறது என்றார்.

தேசிய அளவிலான தொழில்நுட்பப் பயிலரங்கில் தனியார் மென்பொருள் நிறுவன தலைமை செயல் அலுவலர் பி.கோகுலநாதன் கலந்து கொண்டு பேசினார். 50-க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

# மேட்டூர் அருகே அரசு பேருந்து கவிழ்ந்து விபத்து

**மேட்டூர், மார்ச் 13:** மேட்டூர் அருகே சாலை தடுப்பு மீது அரசு சொகுசுப் பேருந்து மோதி கவிழ்ந்ததில் இரு பயணிகள் உள்பட 4 பேர் காயமடைந்தனர்.

சென்னையிலிருந்து மேட்டூருக்கு செவ்வாய்க்கிழமை வந்த அரசு குளிர்சாதன சொகுசுப் பேருந்து புதன்கிழமை அதிகாலை குஞ்சாண்டியூர் பகுதியில் சாலை தடுப்பு மீது மோதியதில் பின் சக்கர அச்சு உடைந்ததால் பேருந்து சாலையில் கவிழ்ந்தது.

பேருந்து ஓட்டுநரான தலைவாசலைச் சேர்ந்த வடகரையான் (40), நடத்துநர் சரவணன், இரு பயணிகள் இந்த விபத்தில் காயமடைந்தனர். மேட்டூர் தீயணைப்பு வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கருமலைக்கூடல் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# இந்திய மாணவர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

**சேலம், மார்ச் 13:** குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வலியுறுத்தி சேலம் அரசு கலைக் கல்லூரி முன்பு இந்திய மாணவர் சங்கத்தினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகள் போராட்டம், பொதுத் துறை நிறுவன பங்குகள் விற்பனை, பெண்களுக்கான பாதுகாப்பின்மை, மாநில அரசுகளுக்கு நிதி வழங்காமை குறித்து பிரதமர் பதிலளிக்காமல் குடியுரிமை திருத்தச் சட்டத்தை மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது. இந்த சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி மாணவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

இந்திய மாணவர் சங்கத்தின் சேலம் அரசு இருபாலர் கலைக் கல்லூரி கிளைச் செயலாளர் கோகுல் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் டார்வின், அபிராமி கோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# போக்குவரத்து ஓய்வூதியர்கள் ஆலோசனைக் கூட்டம்

**சேலம், மார்ச் 13 :** சேலம் புதிய பேருந்து நிலையம் அருகே புதன்கிழமை நடைபெற்ற போக்குவரத்து ஓய்வூதியர்கள் சங்க ஆலோசனைக் கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் எம்.பரமசிவம் தலைமை வகித்தார்.

அச் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சி.பி. வாசன் பேசினார். தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஓய்வூதியர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இலவசமாக வழங்க வேண்டும். உறுப்பினர் சந்தா தொகை செலுத்தினால், அந்த ஆண்டுகளில் செலவிடப்பட்ட மருத்துவச் செலவுகள் முழுமையும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

கூட்டத்தில், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சி. ராஜ்குமார், மாநில உதவி செயலாளர் டி. மணிமுடி, உதவி செயலாளர் சி. செல்லமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திமுக மகளிரணியினர் ஆர்ப்பாட்டம்



ஆத்தூரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுக மகளிரணியினர்.

**சேலம்/ ஆத்தூர், மார்ச் 13:** மகளிர் உரிமைத் தொகை குறித்து அவதூறாகப் பேசிய பாஜக பிரமுகரும், நடிகையுமான குஷ்புவைக் கண்டித்து சேலம், கோட்டை மைதானத்தில் புதன்கிழமை மாலை திமுக மகளிர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் குடும்ப பெண்களுக்கான வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் குறித்து அண்மையில் சர்ச்சைக்குரிய வகையில் நடிகை குஷ்பு கருத்து தெரிவித்திருந்தார். இதனை கண்டித்து, திமுக மகளி அணி சார்பில் மாநிலம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

சேலம், கோட்டை மைதானத்தில், திமுக மகளிர் அணி நிர்வாகியும், மாமன்ற உறுப்பினருமான மஞ்சுளா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக மக்களால் வளர்ச்சி அடைந்த நடிகை குஷ்பு, தமிழக பெண்களை இழிவாகப் பேசியதற்கு கண்டனம் தெரிவித்து, மகளிரணியினர் முழக்கங்கள் எழுப்பினர்.

**ஆத்தூரில்**

திமுக குறித்த நடிகை குஷ்புவின் அவதூறானப் பேச்சைக் கண்டித்து, ஆத்தூரில் திமுக மகளிரணியினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆத்தூர் பழைய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு திமுக மகளிரணி தலைவர் ஜோதிபெருமாள் தலைமை வகித்தார். ஆத்தூர் நகர்மன்றத் தலைவர் நிர்மலாபபிதா மணிகண்டன் பங்கேற்று பேசினார். மகளிர் தொண்டரணி தலைவர் டி.நல்லம்மாள், அமைப்பாளர் சாந்திமுருகேசன், துணை அமைப்பாளர் செல்வராணி, மகளிரணி துணைத் தலைவர் பார்வதிராஜா, கிழக்கு மாவட்ட மகளிரணி வலைதள பிரிவு அமைப்பாளர் ஜி.திலகவதி, வலைதள தொண்டரணி கவிதா, நகர்மன்ற உறுப்பினர்கள் ஜீவா ஸ்டாலின்,பிரவீணா ராஜா, புஷ்பாவதி கதிர்வேல், ஐஸ்வர்யா கோபி, பூங்கோதை கோபி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு



அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை வலியுறுத்தி சேலம், தொங்கு பூங்கா பகுதியில் புதன்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்ற ஆசிரியர்கள்.

**சேலம், மார்ச் 13:** சேலம் மாவட்ட தொடக்கக் கல்வித் துறை சார்பில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி புதன்கிழமை நடைபெற்றது.

2024-2025 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒருபகுதியாக சேலம் மாவட்ட தொடக்க கல்வித் துறை சார்பில் அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்துவது குறித்து விழிப்புணர்வு பேரணி சேலத்தில் நடைபெற்றது. பேரணியில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**ஆத்தூர்**

சீலியம்பட்டி அரசு நடுநிலைப் பள்ளி சார்பில் புதன்கிழமை மாணவர்கள் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

வட்டார கல்வி அலுவலர் அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற பேரணியில் தலைமையாசிரியை ஜி.புஷ்பா அனைவரையும் வரவேற்றார். ஊராட்சி மன்றத் தலைவர் குமரேசன் விழிப்புணர்வு பேரணியை தொடங்கிவைத்தார். பேரணி ஊராட்சியின் முக்கிய வீதிகள் வழியாக சென்று ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர்களிடம் தீவிர மாணவர் சேர்க்கையை ஊக்கப்படுத்தினர். வட்டார கல்வி அலுவலர் கந்தசாமி, ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வடங்கம் அங்காளம்மன் கோயில் தேரோட்டம்



**சங்ககிரி, மார்ச் 13:** சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தேவூர் அருகே உள்ள கல்வடங்கம் அங்காளம்மன் கோயில் தேரோட்டம் புதன்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது (படம்).

கல்வடங்கம் காவிரி ஆற்றங்கரையையொட்டி அமைந்துள்ள அங்காளம்மன் கோயில் தேரோட்ட விழா கடந்த 8 ஆம் தேதி கணபதி ஹோமம் செய்யப்பட்டு கொடியேற்றத்துடன் தொடங்கியது. சக்தி அழைத்தல் நிகழ்ச்சியும், உற்சவ அம்மன் புஷ்ப பல்லக்கில் திருவீதி உலாவும் நடைபெற்றது.

பல்வேறு திவ்ய பொருள்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு பூஜைகள் நடத்தப்பட்டு சிறப்பு அலங்காரத்தில் தேரில் எழுந்தருளிய அங்காளம்மனை பக்தர்கள் வடம் பிடித்து இழுந்து வந்தனர். வியாழக்கிழமை பக்தர்கள் கோயில் வளாகத்தை சுற்றி அங்கப்பிரதட்சணம் செய்து தங்களது வேண்டுதல்களை நிறைவேற்றுதல் நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை சத்தாபாரணமும், பாரி வேட்டையும் நடத்தப்பட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகங்கள், அலங்காரம் செய்யப்பட்டு தேர்திருவிழா நிறைவு பெறுகிறது.

# புதை சாக்கடை இணைப்புக்கு விண்ணப்பிக்கலாம்

**சேலம், மார்ச் 13:** சேலம் மாநகராட்சியில் புதை சாக்கடை இணைப்புக்கு விண்ணப்பிக்கலாம் என மாநகராட்சி ஆணையர் பாலசந்தர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சேலம் மாநகராட்சி எல்லைக்கு உள்பட்ட 4 மண்டலங்களில் குடியிருப்புகள், வணிக கட்டடங்களுக்கு புதை சாக்கடை, வீட்டு கழிவுநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான விண்ணப்பங்களை மண்டல அலுவலகங்களில் பெற்று கொள்ளலாம். கழிவுநீர்க் குழாய் இணைப்புகளுக்கான முன்வைப்புத் தொகை, மாதாந்திர பயணிட்டாளர் கட்டணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி 0 முதல் 500 சதுர அடி கொண்ட குடியிருப்புக்கு ரூ. 4 ஆயிரமும், அதே பரப்பளவில் குடியிருப்பு அல்லாத பகுதிக்கு ரூ. 8 ஆயிரமும் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக 2,401க்கு மேல் பரப்பளவு கொண்ட குடியிருப்புக்கு ரூ. 14 ஆயிரமும், குடியிருப்பு அல்லாத பகுதிக்கு ரூ. 70 ஆயிரமும் கட்டணத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதை சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கான கட்டணங்கள் அனைத்தும் தவணை முறையில் சொத்து வரி வசூலுடன் சேர்த்து வசூலிக்கப்படும்.

புதை சாக்கடை இணைப்புகளில் வீடுகளில் உள்ள குளியலறை, கழிவறை, சமையலறை மூலமாக வெளிவரும் அனைத்து கழிவுகளும் வெளியேற்ற வேண்டும். பொது சுகாதார விதிகளின் படி, கழிவுநீர் இணைப்புகள் பெற வேண்டியது சட்டப்பூர்வமாக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோயில் பூசாரிகள் நலச் சங்க மாநாடு

**சேலம், மார்ச் 13:** தமிழ்நாடு கோயில் பூசாரிகள் நலச் சங்கத்தின் 19 ஆம் ஆண்டு தொடக்க விழா, மாநாடு சேலத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

அச் சங்கத்தின் மாநிலத் தலைவர் வாசு தலைமையில் நடைபெற்ற மாநாட்டில், கிராமப்புற கோயில் பூசாரிகளுக்கு மாதந்தோறும் 5 ஆம் தேதிக்குள் ஓய்வூதியம் வழங்க வேண்டும். இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஒருகால பூஜை நடைபெறும் கோயில்களில் பணியாற்றி ஓய்வுபெறும் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். கோயில்களின் மின் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டில், அச் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சங்கர், மாநில பொருளாளர் கே.சுந்தரம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குடும்பத் தகராறில் கர்ப்பிணி தற்கொலை

**சேலம், மார்ச் 13:** சேலத்தில் கணவருடன் ஏற்பட்ட தகராறில் கர்ப்பிணி தற்கொலை செய்து கொண்டார்.

சேலம், அழகாபுரம், படையப்பா நகர் பிடாரியம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் சாமிசக்தி (30). தனியார் வங்கியில் பணியாற்றி வரும் இவர், சோளம்பள்ளம் பகுதியை சேர்ந்த சோபியா (28) என்பவரை கடந்த 11 மாதங்களுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

சாமிசக்தி மது அருந்திவிட்டு தினமும் அவரது மனைவியுடன் தகராறு செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் மனமுடைந்த சோபியா, வீட்டு அறைக்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண்டார். சந்தேகமடைந்த சாமிசக்தி கதவை உடைத்து உள்ளே சென்றார். அப்போது, தூக்கில் தொங்கிய நிலையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த சோபியாவை மீட்டு சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். 3 மாத கர்ப்பிணியான சோபியா உயிரிழப்பு தொடர்பாக அழகாபுரம் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர். திருமணமாகி 11 மாதங்களே ஆவதால் கோட்டாட்சியர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# மழலையர் பட்டமளிப்பு விழா

**ஆத்தூர், மார்ச் 13:** ஆத்தூரை அடுத்த ஈச்சம்பட்டி ராசி வித்யாஷ்ரம் சிபிஎஸ்இ பள்ளியில் மழலையர் பட்டமளிப்பு விழா பள்ளி தலைவர் ஆர்.ராஜமாணிக்கம் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

ஆத்தூர் மகப்பேறு மற்றும் மகளிர் சிறப்பு மருத்துவர் எம்.வித்யாசங்கரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பள்ளியின் செயலாளர் ஈ.எஸ்.மணி, கல்விக் குழுத் தலைவர் ஆர்.கனகராஜன், பொருளாளர் கே.ரவிக்குமார், துணைத் தலைவர் ஆர்.ரங்கசாமி, இணைச் செயலாளர் பி.குமரேசன், இயக்குநர்கள் ராதாகிருஷ்ணன், டி.மாசிலாமணி, ஆர்.மதியழகன், சுசிலா ராஜமாணிக்கம், ஜே.ஆனந்த்,எஸ். கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மேட்டூர் அரசு மருத்துவமனை முன்பு எம்எல்ஏ தர்னா

**மேட்டூர், மார்ச் 13:** மேட்டூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை, ஆய்வகம் மூடப்பட்டுள்ளதை கண்டித்து எம்எல்ஏ சதாசிவம் புதன்கிழமை மருத்துவமனை முன்பு தர்னாவில் ஈடுபட்டார்.

புதன்கிழமை மாலை அரசு மருத்துவமனைக்குச் சென்ற மேட்டூர் சட்டப் பேரவை உறுப்பினர் எஸ். சதாசிவம் ரத்தம் பரிசோதனை செய்வதற்காக ஆய்வகம் சென்றார். அங்கு ஆய்வகம் மூடப்பட்டிருந்தது. மேலும், மருத்துவர் ஒருவர் மட்டுமே பணியில் இருந்தார். மருத்துவ சேவை குறைபாடு, அவசர காலத்திற்கான ஆய்வகப் பரிசோதனை இல்லாத என அனைத்து சேவை குறைபாடுகளையும் கண்டித்து மருத்துவமனை முன்பு பாமக நிர்வாகிகளுடன் தர்னாவில் ஈடுபட்டார்.

மேட்டூர் அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் இளவரசி, தர்னாவில் ஈடுபட்ட எம்எல்ஏவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஒருங்கிணைந்த ஆய்வகம் திறப்பு குறித்து தகவல் தெரிவிக்காதது குறித்து கண்காணிப்பாளருடன் எம்எல்ஏ விவாதித்தார். அதன்பிறகு ஆய்வகத்தை பார்வையிட அழைத்துசெல்லப்பட்டார். பிறகு தர்னா கைவிடப்பட்டதாக எம்எல்ஏ சதாசிவம் தெரிவித்தார்.

# போக்சோவில் ஆசிரியர் கைது



**எடப்பாடி, மார்ச் 13:** கொங்கணாபுரத்தை அடுத்த அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியர் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு அளித்த புகாரின் பேரில் போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

புதுப்பாளையம் ஊராட்சி, அரிசிபாளையம் அரசு நடுநிலைப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்த வெள்ளாளபுரம் கிராமம், பாச்சாலியூர் பகுதியைச் சேர்ந்த பழனியப்பன் (42) (படம்) பள்ளியில் மாணவிக்கு பாலியல் தொந்தரவு அளித்துள்ளார். இதுகுறித்து மாணவியின் பெற்றோர் அளித்த புகாரில் வழக்குப் பதிவு செய்த கொங்கணாபுரம் போலீஸார் போக்சோ சட்டத்தில் பழனியப்பனைக் கைது செய்தனர்.

# அடிப்படை வசதி கோரி ஆர்ப்பாட்டம்

**ஆத்தூர், மார்ச் 13:** ஆத்தூரில் அப்பமசமுத்திரம் ஊராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி புதன்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆத்தூர் பழைய பேருந்து நிலையம் முன்பு அப்பமசமுத்திரம் ஊராட்சிக்கு உள்பட்ட ராமநாதபுரம், செங்காடுகாடு பகுதியில் சுமார் 5 கி.மீ. தொலைவுக்கு தார்சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் நடவடிக்கை எடுக்காததால் ஊராட்சிமன்ற துணைத் தலைவர் காட்டுராஜா தலைமையில் பொதுமக்கள் கலந்து கொண்ட கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

IKF ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்
IKF Home Finance
மனை எண் 30/A, சர்வே எண் 83/1, மை ஹோம் ட்விட்சா, 11ஆவது தளம், ... APIIC ஹைதராபாத் நாலெட்ஜ் சிட்டி, ராயதுர்க், ஹைதராபாத்–081. தொ.பே.: 040–23412083. www.ikfhomefinance.com

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடன்தாரர் பெயர் – 1). திரு. A ராகேஷ், த/பெ. அவிமுத்து. ... கடன் கணக்கு எண் – LNSLM01320–21000212, LNSLM00118–19000800/ LNSLM00719–20000571, கோரிக்கை அறிவிப்பு தேதி – 15.09.2022
நிலுவைத்தொகை – 14.09.2022 ம் தேதியின் படி, ரூ. 15,96,199/– + ரூ. 3,64,166/– + ரூ. 10,94,671/– = மொத்தம் ரூ. 30,55,036/– ...

அசையா சொத்துக்களின் விபரம்

சொத்து 1 – சேலம் மாவட்டம், ... 650 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் ...
சொத்து 2 – சேலம் மாவட்டம், ... 151/1A2 ல் உள்ள 482 சதுர அடி பரப்பளவு கொண்ட ...

அடிப்படை விலை – ரூ. 38,00,000/–; டெபாசிட்தொகை – ரூ. 3,80,000/–; விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை – ரூ. 15,000/–

–மின்னணு ஏல தேதி – 30.03.2024 ஏல நேரம் – நண்பகல் 01.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை.

KYC ஆவணங்கள், டெபாசிட்தொகை ஆகியவற்றுடன் விலைப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி தேதி 28.03.2024 மாலை 04.00 மணி வரை
சொத்து ஆய்வு தேதி அனைத்து வேலை நாட்களிலும் முன் அனுமதியுடன் 23.03.2024 அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 05.00 மணிக்கு முன்பு.

... recovery@ikfhomefinance.com ... # My Home Twitza, 11 வது தளம், ... HITEC சிட்டி ... "IKF HOME FINANCE LIMITED" ... M/s. C1 India Pvt Ltd., ... https://www.bankeauctions.com ... support@bankeauctions.com telangana@c1india.com ...

நாள்: 13.03.2024, இடம்: சேலம் ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர், IKF ஹோம் ஃபைனான்ஸ் லிட்.

பாங்க் ஆஃப் பரோடா
बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
இராசிபுரம் கிளை
நாமக்கல் மாவட்டம்

தங்க நகை ஏல அறிவிப்பு

கீழ்கண்ட நபர்களுக்கு இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில் அவர் தன் கடன் கணக்கிலுள்ள நிலுவையை செலுத்த தவறி விட்டார். இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து 27.03.2024ம் தேதிக்குள் செலுத்தி நகைகளைத் திரும்பப்பெற்றுக் கொள்ள வேண்டும். தவறினால் கடனிற்கு ஈடான நகைகளை **28.03.2024 தேதி வியாழக்கிழமை மதியம் 3.00 மணியளவில் பேங்க் ஆப் பரோடா வங்கி, இராசிபுரம்** கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும். அல்லது பிற வசதியான நாளில் மேல் அறிவிப்பு ஏதுமின்றி பொது ஏலத்தில் விடப்படும். இந்த அறிவிப்பு கடன்தாரர்கள் இறந்திருப்பின் அவர்களின் வாரிசுகளுக்கும், பாத்தியப்பட்டவர்களுக்கும், வங்கி நோட்டீஸ் பெறாதவர்களுக்கும் பொருந்தும். ஏலத்தொகை கடன் தொகைக்கு ஈடாக இல்லையெனில் மீதித் தொகைக்கு கடன்தாரர் செலவிலேயே சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும்.

| வ. எண். | கடன்பெற்றவர் பெயர் மற்றும் முகவரி | கணக்கு எண் | 13.03.2024 தேதியன்று நிலுவை தொகை |
|---|---|---|---|
| 1. | சுப்ரமணி.A, 3/222, ஆதிதிராவிடர் வீதி, வார்டு 4, கவுண்டம்பாளையம், நாமக்கல் – 637408. | 462920600009231 | ரூ.46,718/– |
| 2. | குணசேகரன், த/பெ.ஆறுமுகம், 78, மாரியம்மன் கோவில் வீதி, இராஜபுரம், கரூர் – 639201. | 46290600013111 | ரூ.26,504/– |

தேதி : 13.03.2024
இடம் : இராசிபுரம் கிளை மேலாளர்

IKF HOME FINANCE LIMITED
Corporate Office: IKF Home Finance Limited
(Formerly known as IKF HOME FINANCE LTD
Corporate Office: IKF Home Finance Limited (Formerly known as IKF Housing Finance Pvt. Limited) # My Home Twitza,11th Floor, M Hotel, HITEC City Main Road, B/S Transco Substation, Raidurg, Hyderabad, Telangana - 500081.
Website: www.ikfhomefinance.com

**SALE NOTICE FOR SALE OF IMMOVABLE PROPERTIES**
**APPENDIX-IV-A [See Provision to Rule 8(6) r/w Rule 9(1)]**

| | | |
|---|---|---|
| 1 | Name and address of the Borrower/Guarantors | **1.** A. RAMESH, S/o. ALLIMUTHU,# 337/63D-19, MARIYA PILLAI STREET,NARASIAMMAN CHETTI ROAD, SHEVAPET SALEM – 636002, TAMIL NADU, INDIA -- (Borrower)<br><br>2. Mr. MANIKANDAN, S/o. ALLIMUTHU,# 337/63D-19, MARIYA PILLAI STREET,NARASIAMMAN CHETTI ROAD, SHEVAPET SALEM – 636 002, TAMIL NADU (Co-Borrower)<br><br>3. Mrs. S. ROJA,D/o.SHANMUGAM,# 337/63D-19, MARIYA PILLAI STREET,NARASIAMMAN CHETTI ROAD, SHEVAPET SALEM – 636 002, TAMIL NADU, INDIA - (Co-Borrower)<br><br>4. Mrs. G. DIVYA,D/o. Gopal,# 337/63D-19, MARIYA PILLAI STREET,NARASIAMMAN CHETTI ROAD, SHEVAPET SALEM – 636 002, TAMIL NADU, INDIA --(Co-Borrower)<br><br>5. Mr. S BOOPATHI,S/O. SELVAM,96/A, N.C. Road, MARIYA PILLAI STREET,NARASIAMMAN CHETTI ROAD, SHEVAPET SALEM – 636 002, TAMIL NADU, INDIA - (Guarantor) |
| 2 | Nameand address of Branch, the Secured Creditor | IKF HOME FINANCE LTDCorporate Office: IKF HOME FINANCELTD Corporate Office: IKF Home Finance Limited (Formerly known as IKF Housing Finance Pvt. Limited) # My Home Twitza,11th Floor, M Hotel, HITEC City Main Road, B/S Transco Substation, Raidurg, Hyderabad, Telangana - 500081.<br><br>Email IDoftheBank:Recovery@ikfhomefinance.com. |
| 3 | Description Of the immovable secured assets to be sold. | **SCHEDULE OF THEPROPERTY**<br><br>**Item No.1**<br><br>In Salem District, Salem West R.D. Salem West Joint No.3, Salem Taluk, Pallapatty Village, as per Punjai New Survey Ward-E, Block-10, T.S. No. 2/2, as per the Urban Tax Sub-Division Ward-E, Block-10, T.S. No. 2/2BJ, out of this land with an extent of 650 Sq. Feet, of Land is related to this description. The boundaries and measurements for the same are:<br><br>South of the 12 Feet North-South Common Road and Thatched house belonged to Chinnapillaiammal |

| | | |
|---|---|---|
| | | East of the Property belonged to Chinnapaiyan<br>North of the Property belonged to Manikandan&Murugesan<br>West of the Property belonged to Sengondagounder<br><br>Within the above boundaries and measuring are: North-South Eastern Side 10'6 Feet, Western Side: 9'6 Feet, East-West Both sides: 65 Feet,As totaling 650 Sq.Feet of Land with Titled house with all fittings with all pathway rights and easements annexed thereto. The above described property situated within the limit of Salem Corporation, The Property Situated at Narasimhan Road (Block-10)<br><br>**Item No.2**<br>In Salem District, Salem West R.D. Salem West Joint No.3, Salem Taluk, Pallapatty Village, as per the New Survey 151/1, Punjai Acre 6.99 Cents, as per the S.No. 151/1A2 out of this land with an extent of 482 Sq. Feet, of Land is related to this description. The boundaries and measurements for the same are:<br><br>North of the Property belonged to Palanisamy and Jaya,<br>East of the Property belonged to A. Sellammal,<br>South of the Property belonged to Manikandan and Chinnapaiyan<br>West of the property belonged to Murugesan<br><br>Within the above boundaries and measuring are: North-South Eastern Side 6 Feet, Western Side: 12 Feet, East-West Both sides: 54 Feet, as totaling 482 Sq. Feet of Land with Titled house with all fittings with all pathway rights and easements annexed thereto. The above described property situated within the limit of Salem Corporation, The Property Situated at Sidhar Kovil Main Road.<br><br>**Reserve Price: Rs.38,60,000/- (Rupees Thirty Eight Lakhs Sixty Thousand Only)** |
| 4 | Details of then cum branches to the secured creditor. | However, Bidders are advised to ascertain electricity dues, property tax and other statutory dues if any independently. |
| 5. | Particulars of the SARFAESI Act Proceedings | LoanAccountNos.**LNSLM01320-210002112 / LNSLM00118-190000800 LNSLM00719-200001571**<br><br>Demand Notice: 15.09.2022Amount due as on 14.09.2022.<br><br>**Rs.15,96,199/- +Rs. 9,64,166 + Rs. 10,94,671 = Total Amount Rs.36,55,036/-**with interest+ Expenses etc., |
| 6 | The secured debt for recovery of which the property is to be sold | Amount Due as on 09-10-2023 **Rs.21,73,515/-+Rs.12,00,774/-** + **Rs.13,70,496/- = Total Amount Rs.47,44,785/-**with interest+ Expenses etc., |
| 7 | Deposit of earnest money | EMD: Rs.3,86,000/-<br>being 10% of Reserve price to be remitted RTGS/ NEFT to the Bank account or by Demand Draft drawn in favor of 'IKF Home Finance Limited" from any branch of any Nationalized Bank or Scheduled Bank |
| 8 | Reserve price of the secured assets: | Rs. 38,60,000/- |

| | | |
|---|---|---|
| 9 | Bank account in which EMD to be remitted. | A/cNo.:11520200014177, IFSC: FDRL0001152,<br>Bank Name: The Federal Bank Limited, Branch:<br>Vijayawada - 520 002 . |
| 10 | Last Date and Time within which EMD to be remitted: | 28.03.2024 up to 04:00PM |
| 11 | Time and manner of payment | The successful bidder shall deposit 25% of sale price, after adjusting the EMD already paid, immediately, i.e. on the same day or not later than next working day, as the case may be, after the acceptance of the offer by the Authorised Officer, failing which the earnest money deposited by the bidder shall be forfeited. The Balance 75% of the sale price is payable on or before the15thday of confirmation of sale of the secured asset or such extended period as may be agreed upon in writing between the secured Creditor and the action purchaser not exceeding three months from the date of auction. |
| 12 | Time and place of E-auction | Date 30.03.2024,Time- 01.00 PM to 2.00 PM<br>With unlimited extension office minutes for each bid, if the bid continues, till the salei s concluded |
| 13 | Thee-Auction will be conducted through the Bank's approved service provider. | M/s C1 India Pvt Ltd, Gurgaon, Haryana-122015 at the web portal: www.bankeauctions.comE-Auction tender documents containing e-Auction bid form, declaration etc., are available in the website of the service provider as mentioned above. |
| 14 | *i.* Bid incremental amount:<br>*ii.* Auto extension:<br>*iii.* Bid currency & unit of measurement | *i.* Rs. 15,000/-<br>*ii.* With auto time extension of 5 minutes for each increment bid.<br>*iii.* Indian Rupees. |
| 15 | Date and Time duringwhich inspection of theimmovablesecuredassetstobesold and intending bidders' shouldsatisfy themselves about the assets andthemisspecification .Contactpersonwithmobilenumber | On Any working day on or before Date 23.03.2024 before 5:00 pm with prior appointment<br>Authorised Officer:<br>Mr. Govindraj Ph. No. 9894078466<br>Mr. Y. VijayaBhasker Reddy Ph.No: 9703051555. |
| 16 | Terms&Conditions | a. Valid email ID is absolutely necessary for the intendingbidder as all the relevant information and allotment of IDand Password by M/s C1 India Pvt Ltd may be conveyed through mail.<br>b. The intending bidder should submit the evidence of EMDdeposit like UTR number along with Request letter forparticipation in the e-Auction, self-attested copies of (i)ProofofIdentification(KYC)VizIDcard/DrivingLicense/Passportetc.,(ii)Current Address–proofofcommunication, (iii) PAN card of the bidder (iv) Valid e-mail ID (v) Contact Number (vi) Scanned copies of |

| | | |
|---|---|---|
| | | theoriginal documents canalso be submitted to e-mailID Recovery@ikfhomefinance.comandAddresstosubmitIKF HOME FINANCE LTD Corporate Office: IKF Home Finance Limited (Formerly known as IKF Housing Finance Pvt. Limited) # My Home Twitza,11th Floor, M Hotel, HITEC City Main Road, B/S Transco Substation, Raidurg, Hyderabad, Telangana - 500081.<br><br>c. Names of Eligible Bidders will be identified by the IKF Home FinanceLtdtoparticipateinonlinee-auctionontheportal https://www.bankeauctions.comofM/s. C1IndiaPvt. Ltd., who will provide User ID and Password after dueverificationofPANoftheeligiblebidders.<br><br>d. On completion of e-auction the Authorised Officer willcommunicatethesuccessfulbidderabouttheacceptanceofthehighest bid submitted byhim.<br><br>e. During e-Auction,ifnobidisreceivedwithinthespecified time, Authorised Officer at his discretion maydecidetoreviseopeningprice/scrap thee-Auctionprocess/proceedwith conventionalamodeoftendering. |
| | | f. TheBank/AuthorisedOfficer/serviceproviderfore-Auction shallnothaveany liability towards bidders forany interruption or delay in access to the site irrespectiveofthecauses.<br><br>g. The bidders are required to submit acceptance of the terms& conditions and modalities of e-Auction adopted by theserviceprovider,beforeparticipatinginthe e-Auction.<br><br>h. Thebidoncesubmittedbythebidder,cannotbecancelled/ withdrawn and the bidder shall be bound to buythe property at the finalbid price. The failure onthe partof bidder to comply with any of the terms and conditionsof e-Auction, mentioned herein will result in forfeiture of the amount paidbythedefaultingbidder.<br><br>i. Decision oftheAuthorised Officer regarding declarationof successful bidder shall be final and binding on all thebidders.<br><br>j. The Authorised Officer shall be at liberty to cancel the e-Auction process/ tender at any time, before declaring thesuccessfulbidder, without assigninganyreason.<br><br>k. The bid submitted without the EMD shall be summarilyrejected. The property shall not be sold below the reserveprice.<br><br>l. The conditional bids may be treated as invalid. Please note thataftersubmissionofthebid/s,nocorrespondenceregardinganychangein thebid shallbeenpertained.<br><br>m. The EMD of the unsuccessful bidder will be refunded totheir respective A/c numbers shared with the Bank. Thebidders will not be entitled to claim any interest, costs,expensesandanyother charges(ifany).<br><br>n. The Authorised Officer is not bound to accept the highesttoofofferandtheAuthorisedOfficerhasabsoluterighttoaccept or reject any or all offer(s) or adjourn/ postpone/cancel the e-Auction without assigning any reason thereof.These |

| | | |
|---|---|---|
| | | allissubjecttoconfirmationbythesecured creditor.<br><br>o. Incaseoffor feature oftheamountdepositedbythedefaultingbidder,heshallneitherhavec laimontheproperty nor on any part of the sum for which may it besubsequentlysold.<br>p. The successful bidder shall bear all the necessary expenseslikeapplicablestampduties/additionalstampduty/transfer charges,Registrationexpenses,feesetc.for transfer ofthepropertyin his/ hername. |

Place:
Date:

AUTHORISED OFFICER

IKF HOME FINANCELIMITED